குறள்நெறி

-குறள்நெறி ஓங்கின் குடியரசு ஓங்கும்-

மின்னிதழ்:127- வைகாசி-19---தி.பி.2057   சூன்—2--- பொ.ஆ.2026

நிறுவுநர்: செந்தமிழ்மாமணி சி.இலக்குவனார்

ஆளுநர் மாளிகையில் ‘திருவள்ளுவர் திருநாள் கழகம்’ நடத்திய விழா

30/5/26 அன்று ஆளுநர் மாளிகையில் ‘திருவள்ளுவர் திருநாள் கழகம்’ என்னும் அமைப்பினால் நடத்தப்பெற்ற விழா.ஆளுநராலோ ஒன்றிய அரசினராலோ இவ் விழா நடத்தப்படவில்லை.

திருவள்ளுவர் பிறந்தநாளை வைகாசி அனுட நட்சத்திரத்தில் கொண்டாட உத்தரவிடக் கோரிய வழக்கு;. அரசு அறிவித்த ‘தை 2-ம் தேதி’ திருவள்ளுவர் தினத்தை மாற்றி அமைக்க இயலாது என உயர்நீதிமன்றம் திட்டவட்டமாகத் தீர்ப்பளித்தது. திருவள்ளுவர் திருநாள் கழகத் தலைவர் சாமி தியாகராஜன் தாக்கல் செய்த மனுவில், தை 2-வது நாள் என்பது திருவள்ளுவரின் சரியான பிறந்தநாள் அல்ல என்றும், தமிழறிஞர்கள் மற்றும் பாரம்பரிய முறைப்படி வைகாசி மாதத்தில் வரும் அனுட நட்சத்திர நாளையே திருவள்ளுவர் பிறந்தநாளாக அறிவிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டது. பொங்கல் பண்டிகையை ஒட்டி வரும் தை 2-ம் தேதி, பொது விடுமுறை நாளாகவும், திருவள்ளுவர் தினமாகவும் தமிழக அரசால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது என அரசு தரப்பில் வாதிடப்பட்டது.நீதிமன்ற உத்தரவு: இந்த வழக்கை விசாரித்த நீதிபதி எம்.தண்டபாணி, திருவள்ளுவரின் பிறப்பு குறித்து எந்த ஆதாரமும் இல்லாத நிலையில், ஒரு குறிப்பிட்ட நாளை அவரது பிறந்தநாளாக நீதிமன்றத்தால் அறிவிக்க முடியாது என்று தீர்ப்பளித்தார். மேலும், மொழி நல்லிணக்கத்தை மேம்படுத்த அரசு ஒரு நாளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாடுவதில் எந்தத் தவறும் இல்லை எனக் கூறி, அரசாணையை மாற்றியமைக்க மறுத்து மனுவைத் தள்ளுபடி செய்தார்.[நாளிதழ்ச் செய்தி]

சிறப்பாசிரியர் குழு: முனைவர் பொற்கோ (முன்னைத் துணைவேந்தர், சென்னைப்பல்கலைக்கழகம்) முனைவர் இ.சுந்தரமூர்த்தி (முன்னைத் துணைவேந்தர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம்) முனைவர் இர.பிரபாகரன் (மேரிலாந்து,அமெரிக்கா) முனைவர் அன்புசெயா (சிட்னி,ஆத்திரேலியா) பாவலர் முரசு நெடுமாறன் (மலேசியா) பேரா.மன்னர்மன்னன் (மலேசியா) பேராசிரியர் பெஞ்சமின் இலெபோ (பிரான்சு) கவிஞர் அழ.பகீரதன் (இலங்கை) கலாநிதி சயந்தினி விக்னராசன் (இலங்கை) பொறியாளர் ச.இராசகுமாரன் (அயர்லாந்து) எலியாசு (சிங்கப்பூர்)திருமதி.மதிவதனி பத்மநாதன் (சுவிட்சர்லாந்து) திருமதி.தாமரை சீனிவாசராவ் (கம்போடியா) முனைவர் இராம சுந்தரம் (கொரியா) தீனதயாளன்(கனடா) பேராசிரியர் தமிழியலன் (சென்னை) இணையாசிரியர்; பாவலர் செல்வ.மீனாட்சிசுந்தரம்

பொறுப்பாசிரியர்: மறைமலை இலக்குவனார்

சைவசித்தாந்தப் பெரும்புலவர் சாமி.தியாகராசன் அரசினர் கல்லூரிகளில் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர்.பணிக்காலத்திலும் பணிஓய்வுக்காலத்திலும் தமிழ் இலக்கியங்களைப் பரப்புவதிலும் குறிப்பாகப் பெரியபுராணம், ஏனைய பன்னிருதிருமுறைகள்,பாரதியார்பாடல்கள் ஆகிய இலக்கியங்களை மக்கள் மன்றத்தில் பரப்புதலே தம் கடனெனக் கொண்டு தன்னார்வப்பணியாற்றிய தகைமையாளர்.1959 முதல் முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதனாரின் முன்முயற்சியால் திருவள்ளுவர் திருநாள் தை இரண்டாம் நாளில் சிறப்பாகக் கொண்டாடாப்பட்ட காலச்சூழலில் திருவள்ளுவர் முக்தி அடைந்த நாளாக் கருதப்பட்டுவந்த வைகாசி அனுடம் புறக்கணிக்கப்படுவதாக மனம் வெதும்பினார். ஒருவர் மறைவுற்ற நாளை விழாவாகக் கொண்டாடுவது முறையா?



MISCELLANEOUS

GOVERNMENT OF MADRAS
1966

PUBLIC DEPARTMENT
(General-M)

G.O. No. 674, 18th March 1966

Holidays—Celebration of Thiruvalluvar Day—2nd June 1966—Declared a Government holiday in lieu of the holiday on 11th June 1966 (Second Saturday).

READ—the following paper :—

G.O. Ms. No. 1964, Public (General-M), dated 14th October 1965.

Order—No. 674, Public (General-M), dated 18th March 1966.

The question of setting apart a particular day as "Thiruvalluvar Day" and declaring it as a Government holiday in lieu of a Second Saturday has been engaging the attention of Government for sometime. After taking into consideration the views expressed by the Tamilnad Non-Gazetted Officers' Union and the Tamilnad Secretariat Association on the subject, it has been decided —

(i) that the day on which Thiruvalluvar attained Mukthi (Vaikasi Anusham) shall be declared a Government holiday in lieu of the Government holiday on the Second Saturday of the same month ; and

(ii) that during 1966, Thursday, the 2nd June 1966 (the day on which Thiruvalluvar attained Mukthi) will be a Government holiday in lieu of the holiday on the 11th June 1966 (Second Saturday).

(By order of the Governor.)

C. A. RAMAKRISHNAN,
Chief Secretary to Government.

To all Heads of Departments (including Collectors, District Magistrates and District Judges).
" all Departments of the Secretariat (including Public) (all sections).
" the Registrar, High Court, Madras (with covering letter).
" the Secretary, Madras Public Service Commission, Mrdras-2 (with covering letter).
" the Public (Information and Publicity) Department.
" all Personal Assistants to Ministers.
" the Manager, Reserve Bank of India, Madras.
" the Secretary, State Bank of India, Madras.
" the Secretary to Government of India, Ministry of Home Affairs, New Delhi (with covering letter).

Copy to the Commissioner, Corporation of Madras (*through* the Mayor).
" the Commissioners of Panchayat Unions (*through* the Chairmen).
" the Executive Officers of Town Panchayats (*through* the Divisional Panchayat Officers).
" the Executive Officer, Cantonment Board, St. Thomas Mount.
" all Executive Authorities of Municipal Councils (*through* the Chairmen).
" the Executive Officer, Mettur Township Committee, Mettur Dam.
" the Chief Kazi to Government of Madras, Royapettah, Madras-14.
" the Registrar, Medical Council, Madras.
" the Secretary, Madras State Sailors', Soldiers' and Airmen's Board, No. 31, Haddows Road, Madras-6.
" the Secretary, Madras State Electricity Board, Mount Road, Madras-2 (with covering letter).
" the Secretary, Madras State Khadi and Village Industries Board, Madras-9 (with covering letter).
" the Chairman, Madras State Housing Board, Nandanam P.O., Madras-35.
" the Registrar, Madras University, Madras-5.
" the Registrar, Annamalai University, Annamalainagar.
" all Union Government Offices in Madras State.
" the Secretary, Madras State Sangita Nataka Sangam, "Brodie Castle", Greenways Road, Madras-28.

திருவள்ளுவர் சமணரே என அறுதியிட்டுரைக்கிறார் அறிஞர் காஞ்சிபுரம் தி.அனந்தநாத நயினார் ! உடன்பட்டுரைக்கி றார் தமிழ்த்தென்றல் திரு.வி.க.!!


ஏலாசாரியர்,
(திருக்குறளாசிரியர்)

நூலின் தலைப்பு:
திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைநசமய சித்தாந்த விளக்கமும்
ஆசிரியர்;காஞ்சிபுரம் தி.அனந்தநாத நயினார்
சென்னை சிரீ ஆதிமூலம் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது பிரஜோற்பத்தி தை மாதம்

'சமணமுனிவர் ஏலாசாரியார்'தான்
திருக்குறள் இயற்றியதாக
நம்பப்படுகிறது.
அவரது திருவுருவே இந் நூலில்
திருக்குறளாசிரியர் படம்
என வழங்கப்பட்டுள்ளது.

திருக்குறள் கடவுள் வாழ்த்தைப் பீடிகையாக் கொண்டு, இந்நூலாசிரியர் அரியதோர் ஆராய்ச்சி நிகழ்த்தித் திருவள்ளுவர் ஜைநர் என்று நிறுவிக் காட்டியுள்ளார். இம்முடிபைத்-- திருவள்ளுவர் நெறி அருணெறி அல்லது பொது நெறிக்குரிய விருஷபதேவர் ஜைநம் என்றும், பிற்காலத்தில் பல திறக் கட்டுக்களால் கட்டுண்டு குறுகிய ஜைநம் அன்றென்றும்-- பாகு படுத்தி ஏற்க என் மனம் ஒருப்படுகிறது. பெண், வீடுபேற்றிற்குத் தடையாயிருப்பவள் என்பதும், பெண்ணை வெறுத்தல் துறவு என்பதும், இன்னோரன்ன பிறவும் பிற்கால ஜைநத்திற் காணப்படுகின்றன. இவைகள் இக்கால ஜைநர்களிடைக் கருத்து வேற்றுமையையும் விளைத்து வருகின்றன.

இலவச இணைய இதழ் -விற்பனைக்கு அல்ல
2 குறள்நெறி மின்னிதழ்:50 மார்கழி-17 -தி.பி.2053 -உலகத் திருக்குறள் இணையக்கல்விக்கழகம்

திருவள்ளுவர், "பெண்ணிற் பெருந்தக்க யாவுள " என்று பெண் பெருமை பேசிய பெரியவர் ; பெண்ணை வெறுத்தல் துறவு என்று யாண்டுங் கூறாத அறவோர்.

பெண்ணுலகைப்பற்றித் திருவள்ளுவர் கொண்ட கருத்தை, என்னால் யாக்கப் பெற்ற "பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை " என்னும் நூலில்' 'இயற்கை யறம்' என்னும் பகுதியில் தெருட்டிக் கூறியுள்ளேன். "பெண் வழிச் சேறல்" என்னும் அதிகாரத்தின் உள்ளக் கிடக்கை அப்பகுதியில் விளங்க ஓதப்பட்டிருக்கிறது.

பிறசமய மறுப்புரைகள் இந்நூற்கண் ஆங்காங்கே காணப்படுகின்றன. மறுப்புரைகள் இக்காலப் போக்குக்கு நலஞ் செய்யா என்பது எனது கருத்து. சமயங்களிலுள்ள பொதுமையையுணர்த்தி, மக்களின் ஒருமைப் பாட்டுக்கு உழைக்கப் புகுதலே காலப் போக்குக்குரிய முறையாகும். இந்நூற்கண் போந்துள்ள பிற சமய மறுப்புரைகள் அவ்வச் சமயப் பௌராணிகத்தைப் பொருளாக் கொண்டெழுந்தனவாகத் தோன்றுகின்றன. பௌராணிகம் ஒரோவழிக் கடந்த வரலாறுகளைக் கூறுவது. ஆதலால் பொருளாராய்ச்சியிற் புகுவோர் பௌராணிகத்தை முற்றுங் கோடல் சிறப்பன்று.

இந்நூலாசிரியர், திருக்குறள் கடவுள் வாழ்த்துக்கு விரிந்த ஆராய்ச்சியுரை காணப் புகுந்து, அதனிடைப் பயன் தரத்தக்க பொருள் பல பெய்திருத்தல் அவாது பன்னூற் பயிற்சியைப் புலப்படுத்துகிறது. ஸ்ரீராமபிரான் கொலை வினை புரியவில்லை யென்றும், திரௌபதை ஐவர்க்கு நாயகியாய் வாழ்க்கைப்பட வில்லை யென்றும் ஜைந ராமாயண பாரதங்களை ஆதாரமாகக் கிளத்தி வெளியிட்டுள்ள உட்கிடக்கைகளும், இன்ன பிறவுங் கழிபேருவகையூட்டுகின் றன. ஆராய்ச்சி மிகுந்த இந்நாளில் ஜைந ராமாயண பாரதங்களைப் பலர் தொடாதிருத்தல் வருந்தத் தக்கது, பண்டைச் சமண நூல்களை ஆராய்வதால் பல நுட்பங் கள் அறிதல் கூடுமென்று எனது அநுபவங் கொண்டு சொல்கிறேன். நன்முயற்சியில் தலைப்பட்டுழைத்து இந்நூலைத் தமிழுலகிற்குதவிய அறிஞர் - திருவாளர் - தி. அநந்த நாத நயினார் அவர்கட்கு எனது நன்றி யறிதல் உரியதாக, இந்நூலைத் தமிழுலகம் ஆதரிப்பதாக,

சென்னை, 24-7-1930. திரு. வி. கலியாணசுந்தரன்

நான்காண்டுகளுக்குமுன் நம் ‘குறள்நெறி’இதழில் வெளிவந்த கட்டுரையையே மீள்பதிப்புச் செய்துள்ளோம்.

இந்த இதழுக்காக இங்கே ஓர் சிறப்புக்கட்டுரை இதோ;

திருக்குறள் சமணத்தின் அருங்கொடை;

சமணம் போற்றும் கொல்லாமை முதலிய அறக் கோட்பாடுகள் இல்லற துறவற நெறிகள் திருக்குறளில் முழுமையாக பிரதிபலிக்கின்றன.

சமணர்களால் வணங்கப்படும் முனிவர்களில் ஏலாச்சாரியார்என அழைக்கப்படும் திருக்குறள் ஆசானும் ஒருவர் ஆவார்

வந்தவாசி- சேத்துப்பட்டு சாலையில் அமைந்துள்ள இவருடைய தொன்மையான திருவடிகள் வந்தவாசிக்கு அருகில் உள்ள பொன்னூர் மலை என அழைக்கப்படும் சிறு குன்றில் உள்ளன .

நாள் வழிபாடு ,சிறப்பு வழிபாடு எனத் தொடர்ந்து இந்தத திருவடிகள் வழிபடப் படுகின்றன .

பொன்னூர் ,தஞ்சை கருந்தட்டான்குடி ஆதிபகவன் ஆலயங்களில் திருக்குறள் ஆசான் திருவுருவச் சிலகள் உள்ளன எந்த ஒரு சமண அற நூலையும் இலக்கியத்தையும் எடுத்துக் கொண்டாலும் திருக்குறள் நெறிகள் அவற்றில் காணப்படும்.

பேராசிரியர் முனைவர் . கனக . அஜிததாஸ் ,

முன்னாள் பேராசிரியர் , மாநிலக்கல்லூரி . சென்னை /

ஆசிரியர் -முக்குடை (சமணத் திங்களிதழ்-)

இங்கே ஒரு வரலாற்றுண்மையைப் அதிவுசெய்துள்ள பேராசிரியர் முனைவர் . கனக . அஜிததாஸ் அவர்கள்

ஒரு தமிழர்;தமிழ்ச் சமணர்.

பேராசிரியர் திருமதி அல்கா ஜெயின் என்னும் வணிகவியல் பேராசிரியர் ஆக்ரா நகரிலிருந்து திருக்குறளில் வணிகவியல் மேலாண்மைக் கோட்பாடு குறித்து ஒரு ஆங்கிலக்கட்டுரை இயற்றி அனுப்பினார்.அவர் தமது மடலில் குறித்த செய்தி எனக்குப் புதிய செய்தி;அஃதாவது அவரது சமணசமயக் கிரந்தங்களில் குந்தகுந்தாசாரியர் படைத்த திருக்குறளும் ஒன்று எனவும் இந்தி மொழியில் பதிக்கப்பெற்ற குறளை அடிப்படையாகக் கொண்டே தமது கட்டுரையை ஆங்கிலத்தில் அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

‘நாள்தோறும் மாலையில் திருக்குறளைப் படிப்பது அவர்களது கடமைகளில் ஒன்று’ என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.அவ்வாறு நாள்தோறும் படிக்கும்வழக்கத்தை ஏற்றிராத எனக்குச் சற்று நாணமாயிருந்தது.

இப்போது புரிகிறதா வள்ளுவருக்கு ஏன் காவிபோர்த்திச் சமயக்குறியீடுகளையும் புனைந்ததன் காரணம்?

அனைத்துச் சமயங்களுக்கும் பொதுவான மாந்தநேயத்தையும் உலக ஒருமைப்பாட்டுணர்வையும் கற்பித்த

வள்ளுவப் பேராசானைச் சமயச்சிமிழில் அடைத்து அரசியல் செல்வாக்கைக் கொண்டு ஆளுநர் மாளிகையிலேயே விழா நடத்திய திருவள்ளுவர் திருநாள்கழகம் தனது செயலுக்கு மன்னிப்புக் கேட்கவேண்டும்.திருவள்ளுவருக்குப் புனையப்பெற்ற சமயக்குறியீடுகளை அகற்றித் தமிழ்நாட்டு அரசு பயன்படுத்தும் திரு.வேணுகோபால் சர்மா அவர்களின் ஓவியத்தையே இனிப் பயன்படுத்துவதாக உறுதியளிக்க வேண்டும்.இன்றேல் திருக்குறளாசான் ஏலாசாரியார் திருநாள் கொண்டாடும் முயற்சியில் முனைவோம்.



உலகப்பேராசான் திருவள்ளுவப் பெருந்தகையைச் சமயச்சிமிழில் அடைத்த ‘திருவள்ளுவர் திருநாள்கழகம்’ தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்துத் தனது போக்கை உடனே மாற்றிக்கொள்ளாவிட்டால் திருக்குறளாசான் ஏலாச்சாரியார் திருவுருவத்தையே இனி ‘’உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகம்’’தனது இலச்சினையாக ஏற்று உலகெங்கும் உலாவரச்செய்யும்.

திருவள்ளுவர் ஆண்டு

--சிறுவை.நச்சினார்க்கினியன்

[திரு.மோகனசுந்தரம் எனும் இயற்பெயருடைய இப் பெரியார் “நக்கீரர் தமிழ்க் கழகம் “ என்னும் அமைப்பை நிறுவி மாலைநேரத் தமிழ்க் கல்லூரி நடத்திவந்தார். வித்துவான், இளங்கலை,முதுகலை தனிப்பட்ட முறையில் தேர்வு எழுதும் ஆசிரியப் பெருமக்களுக்கு இலவசமாகத் தொல்காப்பியமும் ஏனைய பாடங்களும் தக்க பேராசிரியர்களைக் கொண்டு வகுப்பு நடத்தினார். சிலம்பொலியார்,பேரா.த.ஞானசுந்தரம், பேரா.திருமதி.சரளா இராசகோபாலன் ஆகியோருடன் குறள்நெறிப் பொறுப்பாசிரியரும் இத்தகைய வகுப்புகளை நடத்திப் பலரது உயர்கல்விக்கும் அதன்வழிப் பதவி உயர்வுக்கும் வழிவகுத்துள்ளனர்.கா.நமச்சிவாயர் நற்பணிகளையும் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடும் பழக்கம் பரவ அவர் ஆற்றிய அளப்பரும் தொண்டினையும் தான் வாழும்வரை எடுத்துரைத்த நச்சினார்க்கினியன் அவர்களை இன்றைய தமிழ்நாடு மறந்துவிட்டது.]

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது தமிழகத்தின் நெடு நாளைய பழமொழி. சூரியன் சுற்றும் நிலையின் கணக்கினைக் கொண்டு, அந்நாளில் தை முதல் ஆனி ஈறாக ஒரு பகுதியும், ஆடி முதல் மார்கழி ஈறாக மற்றொரு பகுதியும் விளங்கின. ஆடி முதல் மார்கழி ஈறாக உள்ள காலம் இருள் நிலை கொண்டது. தை முதல் ஆனி ஈறாக கொண்ட காலம் பகல் நிலை கொண்டது. ஆண்டின இரவுக் காலமாகிய ஆடி முதல் மார்கழி ஈறாக உள்ள காலத்தில் அதாவது ஆடிக் காற்றிலும் அடுத்துள்ள ஐப்பசி மழையிலும், மார்கழிப் பனி யிலும் குளிரிலும் இடர்ப்படும் பொழுது மக்கள் உள்ளத்தில் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற நம்பிக்கை ஒலி பேரொலியாய்க் கேட்கிறது.

இந்த இரவு நிலை மாறிப் பகல் நிலை பெற்றுப் பயன் தரும் தைப் பிறப்பு நாளைப் புத்தாண்டின் புனித நாளாய், பிறப்பு நாளாய்ப் பழந்தமிழர் கொண்டாடி வந்தனர். இன்றுங்கூட, தைப் பிறப்பைத் தனிப் பெருஞ் சிறப்பாகத் தமிழர்கள் கொண்டாடி வருகிறார்கள். ஆகவே, நாம் தைத் திங்களையே ஆண்டின் முதல் திங்களாய்க் கணக்கெடுத்துச் செயற்படுத்துவோம்.

‘தமிழ்நாடு குறிப்பிட்ட ஓர் ஆண்டிற்கு முன்னே இப்படி இருந்தது. பின்னர் இப்படி ஆயது' என்று சொல்வதற்கு ஓர் ஆண்டுக் கணக்கு இல்லை. மேலை நாட்டினர் கிறித்துவுக்கு முன் இப்படி இருந்தோம் கிறித்துவுக்குப் பின் இப்படி இருக்கிறோம் என்று ஒரு கால அளவை வைத்துக் கொண்டிருக்கின்றனர். நம்மிடமிருந்து நேற்றுப் பிரிந்து சென்று இன்று மலையாளம் என்ற பெயர் தாங்கியுள்ள சேரநாட்டுத் தமிழர்களும் தமக்கென்று ' கொல்லம் ஆண்டு' என்ற கணக்கை வகுத்துக் கொண்டனர். ஆனால் தமிழர்களாய நாமோ அறுபது ஆண்டு வட்டத்திலேயே சுற்றிச்சுற்றி சுழன்று வருகிறோம். இந்த அறுபது ஆண்டு வட்டத்தில் ஒரு குறிப்பிட்ட பிறப்பு அல்லது இழப்பு நிகழ்ச்சி, ஒரு நள ஆண்டில் ஏற்பட்டு, இரண்டு மூன்று நள ஆண்டுகள் சுற்றிக் கழிந்துவிட்டால் எந்த நள ஆண்டில் அந்தப் பிறப்போ இழப்போ ஏற்பட்டது? என்ற

மருட்சி ஏற்படவே செய்கிறது. ஆகவே 60 ஆண்டு வட்டத்தில் சுழலாது நமக்கென ஒரு வரலாற்றுக் காலத்தை நாம் வகுத்துக் கொள்ளவேண்டும். பாரதி கூறியது போல் பெயரளவில் தமிழரெனக் கொண்டுவாழ்ந்திருத்தல்நலம்அன்று.

அங்ஙனம் நாம் அமைத்துக்கொள்ளும் தொடர் ஆண்டு நம்மிடை வாழ்ந்த, நமக்கு என்றும் மங் காத புகழினைத் தேடித் தந்த-நாமும் அவரை உலகினுக்கே அளித்து வான்புகழ் கொண்ட-ஒரு தலைமை சான்ற புலவன் பெயரால், மனித குலத்திற்கு வாழ்க்கை அமைப்பு முறை சட்டத் தையே உருவாக்கி அளித்த உலகக் கவிஞன் திருவள்ளுவர் பெயரால் தொடர் ஆண்டு அமைதல் வேண்டும். அவ்வாறு தொடராண்டு அமைத்து நடைமுறைக்குக் கொண்டு வந்த பின், இனித் தமிழர்களுக்கு ஒரு தொடராண்டில்லை என்ற பேச்சும் இல்லை, குறையும் இல்லை.

சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பே இக் குறையினை உணர்ந்த தமிழ்ப் பேரறிஞர்கள் 1935-ல் சென்னைப் பச்சையப்பன் மண்டபத்தில் பேரா சிரியர் கா. நமச்சிவாயர் அமைப்பாளராய் இருந்து கொண்டாடிய திருவள்ளுவர் திருநாளில், தலைமை வகித்துப் பேசிய ஆசிரியர் மறைமலையடிகளார் பல ஆய்வுரைகளைக் கூறி, முடிவாக, 'எனவே, திருவள்ளுவனார் காலம் 2 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதென்பது எளிதிற் பெறப்படும். கிறித்து பிறப்பதற்கு 30 ஆண்டுகட்கு முன் திருவள்ளுவர் பிறந்தார் என்பது நான் ஆராய்ந்து கண்ட முடிபாகும்" எனக் கூறி னார்கள்.

இன்றைய முறைப் படி இதுவரை பல நாள், கிழமை, திங்கள் இதழ் களில், ஆண்டு மலர்களில், அழைப்பு இதழ்களில் எல்லாம் மிக வேகமாகத் திருவள்ளுவர் தொடர் ஆண்டு பரவிவிட்டது. இன்றும் சில இதழ்கள் 'ஸ்ரீ' என்ற சொல்லை விடாது தொடர்ந்து பிடித்திருப்போர் போல, 60 வட்டத்திலேயே சுற்றி வருகின்றன. இனி, அவ்விதழ்களும் உலகத் தோடு ஒட்ட ஒழுகி மாறிவிடும் என்பதில் ஐயம் இல்லை. திரு. ஆ. 2031-குள் (கி.பி. 2000-க்குள்) தமிழகத்தில் உள்ள எல்லா எழுத்தாளர்களும் அறிஞர் பெருமக்களும் இதனையே கடமையாகக் கொண்டு அவரவர்கள் தொடர்பு கொண்டுள்ள ஆட்சிக்கழகங்கள், மன்றங்கள், படிப்பகங்கள், இலக்கிய நிறுவனங்கள் அனைத்திலும் தங்களது தலைப்புத் தாள்களில் தங்கள் கடிதப் போக்குவரத் துகளிலும் திருவள்ளுவர் ஆண்டினையே இட்டு வழக்கப்படுத்த வேண்டியது அவரவர் கடமையாகும்.

ஒரு சிலருக்கு இத் தொடர் ஆண்டில் ஐயம் இருக்குமாயின் பின்னர் தக்க ஆய்வு தலைப்படுங்கால் நாம் மாற்றிக்கொள்வதில் இழுக்கொன்றும் இல்லை. இதுபோழ்து இருப்பதைக் கொண்டு, தக்கார் எடுத்த ஆய்வினை ஒட்டி உலகத்தோடு பீடு நடை போட்டு முன்னே செல்வோம். தமிழ் இனம், தமிழ்மொழியின் வளம் திருவள்ளுவருக்கு முன்பு இப்படி இருந்தது ; திருவள்ளுவருக்குப் பின்பு இப்படி ஆயிற்று என்ற முடிபுகளை உலகத்திற்கு எடுத்துச் சொல்வோம்.

“இனி ஒரு விதி செய்வோம் அதை எந்த நாளும் காப்போம்" என்ற பாரதியாரின் தூய மொழிப்படி, இனியாவது அறிஞர்கள் அனைவரும் தங்களது வேற்றுமைகளை மறந்து, தமிழின் பெயரால் ஒன்று கூடி, திருவள்ளுவர் ஆண்டினைப் பரப்புவோம். அதன் மூலம் தமிழ் இனத்திற்கு ஒரு தொடராண்டில்லை என்ற அவச் சொல்லை அழித்தவர்களாவோம். தமிழன் தலை நிமிர்ந்து வரலாற்றுச் சுவடியில் நேரே செல்ல வழி வகுத்தவர்களாவோம். நம்மை உணர்ந்தவர்ளாகவும்ஆவோம்.நாம்ஒற்றுமைக்குவழிவகுத்தவர்களாவோம்.

திருக்குறள் பணி சிறந்தோங்க, தமிழர் அனை வரும் தங்கள் தங்கள் வருவாயில் ஒரு சிறு பகுதியை அரசுக்குப் பகிர்ந்தளித்து ஊக்குவிக்கலாம். திரு. ஆ. 2031-க்குள் குறள் நூல் இல்லாத குடும்பமே தமிழகத்தில் இல்லை என்ற பெருமையைத் தேடிக் கொள்ள வேண்டும். மக்கள்தொகை(பிறப்பு,இழப்பு)கணிப்பிலும் திருவள்ளுவர் ஆண்டினையே கைக்கொள்ளலாம். அத்தகு பெருமையால் குறள் வழி அரசும், அரசுவழி குறள் நெறியும் சிறப்பெய்தும்.அந்நாளே,"வள்ளுவன்தன்னைஉலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என்ற பாரதியாரின் பொன்மொழியை உணர்ந்து மகிழும் நன்னாளாகும்.

---நன்றி: ஐந்தாம் உலகத் தமிழ்மாநாட்டு மலர்: பக்;407-408

திருவள்ளுவர் திருநாள் – குழப்ப வேண்டாம்

12/1/22-அன்று வெளிவந்த நாளிதழொன்றில் திருவள்ளுவர் திருநாள் வைகாசித் திங்கள் அனுடம்-திருவள்ளுவர் முக்தி தினம் என்பதை அனைவரும் ஏற்றிருந்தனர் எனவும் இதனைத் தை இரண்டாம் நாள் என மாற்றியமை பிழை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு.

(குறள்-அதிகாரம்-43-பாடல் எண் 423)

1)சான்றோர்கள் இறந்ததாகக் குறிப்பிடக் கூடாது.இறைப்பற்றாளர்கள் இறைவனடி சேர்ந்ததாகவோ முத்தி அடைந்ததாகவோ குறிப்பிடுவதும் பகுத்தறிவாளர்கள் புகழுடல் எய்தியதாகக் குறிப்பிடுவதும் மரபு.யாரேனும் ஒருவர் மறைவுற்ற நாளைத் திருநாள் எனக் கொண்டாடுவார்களா?மரபு உண்டா?

2)திருவள்ளுவர் திருநாள் என அவர் புகழுடல் எய்தியநாளைக் கொண்டாடுதல் பிழையல்லவா?

3)இதனைக் குறித்து முத்தமிழ்க்காவலர் முதன்முதலில் சிந்தித்தார்.அன்றைய பெரும்புலவர்களைக் கண்டு கலந்துரையாடினார்.சமயப் பெரியோர்கள் பிறப்பே இல்லா இறைவனுக்குக் கண்ணன் பிறந்தநாள் எனவும் முருகன் பிறந்தநாள் எனவும் பிள்ளையார் பிறந்தநாள் எனவும் கற்பித்துக்கொண்டு வரையறை செய்ததைப் போலவே அன்றைய தமிழ்ப்புலவர்கள் தை இரண்டாம் நாளைத் திருவள்ளுவர் திருநாள் என முடிவு செய்தார்கள்.அவரால் உருவாகப்பட்ட தமிழகப் புலவர் குழு அன்றைய சிறந்த அறிஞர்களாகப் போற்றப்பட்ட

பாவாணர், பாரதிதாசன், இலக்குவனார்,மு.வ.,மயிலை சீனி வேங்கடசாமி, நயினா முகமது, ரம்போலா மாசுகரனேசு முதலாக 49 புலவர்களைக் கொண்டது.(நீண்ட வரலாற்றைத் தேவை கருதிச் சுருக்கியுள்ளேன்.)

4)அந்தப் பெரும்புலவர்கள் ஒன்றிணைந்து எடுத்த முடிவின்படி திருவள்ளுவர் திருநாள் தை இரண்டாம் நாளில் தமிழகமெங்கும் சாதி,சமய,கட்சி வேறுபாடின்றி அறுபது ஆண்டுகளுக்கும் மேலாகக் கொண்டாடப்பட்டுவருகிறது.

5)தி.மு.க.ஆட்சி அமைவதற்கு முன்பிருந்தே இங்ஙனம் கொண்டாடப்பட்டு வருவதாலும் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில் அமைந்த புலவர்குழு வேண்டிக் கொண்டமையாலுமே கலைஞர் இதனை அறிவித்தார்.(காரணம், முத்தியடைந்த நாளைக் கொண்டாடுதல் மரபன்று என்பதாலேயே.)

6)விருப்பமும் விழைவும் உள்ளோர், சமயச்சான்றோர் குருபூசை செய்வதுபோல் நல்லறச் செயல்களை வைகாசி அனுடத்தில் நிகழ்த்துவதிலே நமக்கு மறுப்பில்லை.7)ஆயின் தை இரண்டாம் திருவள்ளுவர் திருநாள்-பாரதிதாசன், பாவாணர், இலக்குவனார், பன்மொழிப்புலவர் கா.அப்பாதுரையார் என அனைத்துத் தமிழ்ச் சான்றோர்களும் கொண்டாடி மகிழ்ந்த திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுவோம். கட்சி,சாதி,சமய,வட்டார வேறுபாடுகளைக் களைந்தெறிவோம்-வள்ளுவர் பெயரால்!

.

மறைமலையடிகளார் தலைமையில் தமிழ்ச்சான்றோர் அணிவகுத்துத் திருவள்ளுவர் தொடர் ஆண்டு அறிவித்த வரலாற்றுப் புகழ் காட்சி